உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ரு.	சுக்கில—ஆனி.	மலர் ௩.

உ

உயிர்ப்பண்புகளும் வீட்டுவாயில்களும்.

திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
சலகண்டபுரம்.

3-ம் துணர் 447 பக்கத்தொடர்ச்சி.

பொய்கண்டார்காணாப் புனிதராகிய நம் மெய்கண்டசிவம் அருள்சுரந்தளித்த சைவசித்தாந்தத் தலைமைப் பெருநூலாகிய சிவஞானபோதத்தில், பொது, உண்மை எனப் பகுக்கப்பட்ட இரண்டதிகாரத்தினுள்ளும் ஈற்றினின்ற உண்மையதிகாரத்தைச் சாதனவியல், பயனியல் என வகுத்து அவற்றுட் பயனியலின் இரண்டாம் பாதமாகிய பதினோராவது நூற்பா (சூத்திரம்) வினுள், அறிவு முதலிய மூன்றும் இறைவன்பாற்பட நிகழ்வது வீடுபேறென்பது விளம்பப்பட்டது.

"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே" என்னும் இந்நூற்

பாவு (சூத்திரத்து) க்கு விரிவுரை (மாபாடியம்) வகுத்த தவஞான நினைவராம் சிவஞானமுனிவர் பிண்டப்பொழிப்பாக, "காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு உருவத்தைக் காணுமாறு, பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று, அதற்கு அதனைக்காட்டித் தான் காண்கின்ற ஆன்மாவைப்போல, அறிவிக்க அறிவதாகிய ஆன்மா, விடயத்தையறியுமாறு, முதல்வன், பிரிப்பின்றி, உடங்கியைந்து நின்று அதற்கு அதனை அறிவித்துத் தான் அறிந்து வருதலின், இவ்வாறு அத்துவிதமாய் நின்று உதவிசெய்துவரும் பெருங்கருணையை **மறவாது கடைப்பிடித்துச்** செய்யும் **அன்பானே**, அம்முதல்வன் திருவடியாகிய சிவாநுபூதியைத் **தலைப்படும்** என்றவாறு" என உரைத்தருளினர்.

இதில் தடித்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மறவாமை, கடைப்பிடித்தல் முதலியன இறைவன்மாட் டிடையீடற நினைவு கூர்ந்து நிற்கும் அறிவின் உறுதிப்பாடும், அவன் செய்யும் உதவியை நினைந்துநிற்கும் அன்பாகிய விழைவும், அவனடியைத் தலைப்படும் செயலும் ஆகிய உயிரின் அறிவிச்சை செயல்கள் மூன்றும், வீடுபேறுற ஒருநிலைப்படும் கருவிகளாக அமைகின்றன வென்னும் உண்மையைத் தெற்றென விளக்குதல் காண்க. மற்றும், அந்நூற்பாவின்கீழ், உரைக்குறிப்பாக,

"அறிவிச்சை செயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் * அன்பும், அரன்கழல் சேறலும் முறையே காரண காரியங்களாய் † அவ்வொரு பொருண்மேல் ஒருங்கு நிகழுமென்பார் 'அயராவன்பினரன்கழல் செலுமே' என்றார்" எனச் சிறிதும் ஐயமறத் தெள்ளத்தெளிய விளக்கியருளியவாறும் அறிந்து பாராட்டி மகிழற்பாலதாம்.

மேலும், பன்னிரண்டாவது நூற்பாவினுரைக் குறிப்பில் அம்மலங் கழீஇ என்றதனாற் சீவன் முத்தர்க்குப் புறத்தே அறிவு வியாபரிக்குமிடமும், அன்பொடுமரீஇ என்றதனால் இச்சை

---

* அயராமை = மறவாமை, அறிவு சோராது நின்றறிதல்.

† ஒரு பொருள் = இறைவன்.

வியாபரிக்குமிடமும், தொழும் என்றதனால் செயல் வியாபரிக்கு மிடமும் பெறப்பட்டமையான் அவாய்நிலை நிரப்பியவாறு கண்டு கொள்க. இம்மூன்றும் பிரிப்பின்றி உடனிகழ்ச்சியாய் ஓரிடத் தோருங்கு நிகழ்வன வாகலின் விடயவேற்றுமையின்மையு முணர்க.............இஃது அணைந்தோரது தன்மையென்பது பெற்றாம்." என வீடுபேறுற்ற மெய்ஞ்ஞானிகளின் அறிவிச்சை செயல்கள் இவ்வண்ணம் இயலுமென முடிபுணர்த்துகின்றமை யானும் சைவசித்தாந்த நூலின் வீடுபேற்றுமுறை அங்கை நெல்லிக்கனியாம்.

இனிக் கடவுள் உண்டெனக்கொண்டு பலதிறப்படும் சமயத் தவர் எவர்க்கும் ஒப்பமுடிந்த பொதுமறையாகிய தமிழ்மறை (திருக்குறள்) கடவுள் வாழ்த்தில் கூறும் நெறியும் இவ்வறிவிச்சை செயல்களின் வழிப்படுவனவே யாமாறு காட்டி எல்லாமதத்தின ரின் முடிந்த கொள்கையும் இஃதேயௗ வலிபுறுப்பாம்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

என்பதுபோல வருங் குறட்களில் 'சேர்தல்' என்பதற்கு 'இடைவிடாது நியானித்தல்' எனப் பரிமேலழகர் பொருள் கூறுதலின், இஃது அறிவாலிறைவனை அடையுமாறு கூறிற்றாம்.

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" எனும்

இக்குறளில் புரிதல்=விரும்புதல் ஆதலின் இஃது விருப்பத்தை அவன் புகழ்மேற் செல்லவிட்டு வாயார வாழ்த்துதல் செய்யுமாறு செப்பியதாம்.

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

இதனுள் ஒழுக்க நெறிநிற்றல் என்பது செய்கையால் இறைவன் விதித்தவாறொழுகல் என ஓதியவாறும்.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
றாளை வணங்காத் தலை" என்பதூஉமது.

ஆகவே மனம் மொழிமெய்கள்கொண்டு அறிவிச்சை செயல்களை ஒரு நெறிப்படுத்து இறைவனைக் குறிக்கொண்டொழுகலே வீடு பேறுதரும் நெறி என்பது நன்கு துலங்கிற்று.

இனிச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் வீடு பேற்றிற்குரிய நால்வகைக் கருவிகளும் இவ்வறிவு வேட்கை செயலென்னும் மூன்றனுள்ளே யடங்குமாறும் காட்டுதும். செய்கை சிறப்புற்று வேட்கையும் அறிவும் குறைவுற்றது சரியை. வேட்கை (பத்தி) சிறந்து ஏனை இரண்டுங் குறைந்தது கிரியை. அறிவு முதலிய மூன்றும் ஒருங்கு சிறந்து நிட்டையில் ஒன்று பட்டும் பின்பிரிந்தியல்வது யோகம். அங்ஙனம் எக்காலும் பிரிவுபடாது அறிவாதிகள் மூன்றும் தம் முழு ஆற்றலும் பொருந்த இங்ஙனம் இறைவன் திருவடிகளை நாடிக்கிடத்தல் ஞானம் என உய்த்துணர்க. இங்ஙனமே * ஞானம் ஏறிக் கிரியை (செயல்) அற்றது சிவதத்துவம்; (கிரியை) செயல் ஏறி (ஞானம்) அறிவு அற்றது சத்திதத்துவம்; அறிவும் செயலும் தம்முள் ஒரு நிகரானவாதல் சாதாக்கிய தத்துவம்; அறிவு குறைந்து செயல் மிக்கு நிற்பது ஈசுரதத்துவம்; அறிவுமிக்குச் செயல் குறைந்திருப்பது சுத்தவித்தை எனவும் (அறிவுவேட்கைள் இரண்டும் ஒன்றுறச் செயலைத் தனிக்கூறி) இவை கூடலாலும் குறைவு நிறைவுற நிற்றலாலும் மேற்கூறியவாறு சிவம், சத்தி, சுத்தவித்தை சாதாக்கியம் ஈசுரம் என முதற்கணின்ற ஐந்து தத்துவங்களும் அமைந்த வியல்பைச் சைவசித்தாந்தம் நுவல்கின்றது. இவ்வாற்றால், இம்மை, மறுமை, வீடுகளுக்கின்றியமையாச் சிறப்பினவாக உயிர்கட்குதவுவனவும், ஆங்கே இறைவனுக்கும் பொருந்தி உயிர்கட்குக் கருணைசுரப்பச் செய்வனவும் பொதுமையில் இயல்பாகவமைந்த அறிவுவிழைவுசெயல் என்னும் இம்முப்பண்புகளேயாதல் பெற்றாம்.

---

*"ஞானமே யானபோது சிவன் ருெழில் ஞானமொக்கி
லீனமில் சதாசிவன் பேரீசனுந்தொழில தேறி
ஞானமேற் கிரியை வித்தை........." எனவரும் சிவஞானசித்தியில் அறிக.

இதுகாறும் கூறியவற்றினின்று பெற்ற உண்மைகளை நிரலே நிறுத்திக் காண்பாம்.

(க) எல்லாவுயிர்களும் அறிவு, விழைவு செயல் என்னும் இம்மூன்று பண்புகளையும் இயல்பாகவுடையன.

(உ) இப்பண்புகள் இம்மை வாழ்க்கைக்கேயன்றிப் பிறவா நெறிதருதற்கும் பயன்படுவனவாம்.

(ந) அறிவு = உயிரின் இயற்கைப் பண்பு. புத்தி: உட்கருவிகளுள் ஒன்று. இவ்விரண்டும் ஒன்றுகா, பொதுவியல்பறிதல், சிறப்பியல்பறிதல் என வேறுபாடுறுதலின்.

(ச) உயிர்களின் அறிவு, வித்தியா தத்துவத்தானும், விருப்பம், அராக தத்துவத்தானும், செயல், கலா தத்துவத்தானும், விளங்குமாறு இறைவன் கருணைகூர்கின்றான்.

(ரு) அறிவும் விழைவும் நுண்மையுடையன (சூக்குமம்). செயல் பருப்பொருள் (தூலம்).

(சு) இறைவனுக்கும் அறிவு முதலிய மூன்றும் உண்டு. ஆயினும் அவை, உயிர்களின் சிற்றறிவு முதலியவை போலாது அளவிலாத் தகையனவாய்ச் சிறப்புறும்.

(எ) உயிர்கள், வினைகளாற் பிறவிபெற்று வருதலின் வினைகளை ஒழிக்க முயற்சித்தல் வேண்டும். பிறவி நீக்கத்துக்கு வேறு வழியில்லை. அவ்வினைகளுள் எஞ்சி நின்றவூழ், உடலூழ், என்னுமிரண்டு முறையே வருவாய்வினை எறுவழித் தானே ஒழிவதாயும், நுகர்ந்தே உடலோடு கழிவதாயு மிருத்தலின் வீடுபேறுவிரும்புவோர் வருவாய் வினையை மாற்றல் வேண்டும். அது மாற, இறைவனடிக்குத் தம் அறிவாதி மூன்றையும் செலுத்துதல் வேண்டும்.

(அ) தெய்வங்கொள்ளும் எல்லாச் சமய நூற்களுக்கும் ஒத்த துணிபு அறிவு முதலிய மூன்றும் கடவுள்பாற் செலுத்தல் வேண்டுமென்பதே.

(கூ) ஏனைச் சமயங்களைப் பார்க்கினும் சைவ சித்தாந்தத்து இவ்வுண்மை மிகவும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

(ய) மற்றைச் சமயங்களும் இக்கொள்கையினவே யாதலை சுருங்கவுணர்த்தற்குத் திருக்குறள் எல்லாச்சமயிகளுக்கும் பொது மறையாதலின் அந்நூலினின்று மேற்கோள்கள் காட்டப்பட்டன.

முற்றும்.

தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 1929 ஜூன்மீ 16உ மாலை 6 மணிக்கு நடந்த பொதுமக்கள் கூட்டத்தின் முடிவுகள்.

அவைத்தலைவர் :—

திரு. த. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள், B.A., B.L.
கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர்.

முடிவு I.—தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் பொது மக்களின் கூட்டமாகிய இது கீழ்க் கண்ட காரணங்களை உள்ளிட்ட பிறகாரணங்களுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவினர், நாட்டுமொழிப் பயிற்சியின் பொருட்டுச் செய்துள்ள சிபார்சுகள் மிகவும் பிற்போக்கானவை என்பதாகவும் அம்மொழி வளர்ச்சியை வேரறுக்கத் தக்கனவென்பதாகவும் கண்டனம் செய்கிறது.

(அ) முதற்றரக் கல்லூரிகளில் (First grade colleges) நாட்டு மொழிப்புலமை நிரம்பிய பண்டிதர் ஒருவரேனும் நியமிக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமையை உணராது, மொழிபெயர்ப்பு வகுப்புகளை

(Translation classes) நடாத்துதற்கென ஆங்கிலப்பட்டதாரி (Graduate in Arts) ஒருவராகிலும் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது ; இரண்டாந் தாரக் கல்லூரிகளிலோ (Second grade colleges) இதனினுங் கெடுதலாகப் பண்டிதரை அறவே விலக்கிப் பட்டதாரியின் நியமனமே வலியுறுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) நாட்டுமொழிகளின் இலக்கிய இலக்கணங்களிற்புலமை நிரம்பிய பண்டிதர்களே கல்லூரி வகுப்புக்களில் (College Classes) நாட்டுமொழிகளைப் போதிக்கத் தகுதியுள்ளவராவர்; அத்தகைய புலமை ஒரு சிறிதுமில்லாத ஆங்கிலப் பட்டதாரிகள் (Graduates) அம்மொழிகளைப் போதிக்கத் தகுதியற்றவர் ஆவர்.

(இ) மொழிபெயர்ப்பானது (Translation) நாட்டுமொழிப் பாடங்களில் நடுத்தரத் தேர்தலில் (Intermediate Examination) ஐந்திலொரு பங்கும், பி. எ. தேர்தலில் ஆறிலொருபங்குமாக இருப்பதெனவும், அதுதானும் ஆங்கிலத்தை நாட்டுமொழிப் படுத்தலேயாக நிற்கிறதெனவும் பாட அட்டவணை (Syllabus of Studies) யினின்றும் புலனாகின்றது. இக் காரணம்பற்றியே நாட்டுமொழிபற்றிய எல்லாப் பாடங்களையும் கற்பிக்க ஆங்கிலப் பட்டதாரிகளே (Graduates) போதுமென்றெண்ணுவது ஒழுங்குமன்று, நீதியுமன்று.

(ஈ) மாணவர்கள் இருமொழிப் புலமையும் எய்திய பின்னரே மொழிபெயர்ப்பைச் செம்மையாகவும் எளிதாகவும் செய்ய இயலும். இருமொழியினும் திறனுண்டோவென ஐயுறற்குரிய ஆங்கிலப் பட்டதாரி (Graduates) களிடம் இவ்வேலை ஒப்புவிக்கப்படுமாயின் கொண்ட நோக்கம் நிறைவேறாது பாழ்படும்.

(உ) மொழிபெயர்ப்பு வேலை ஒப்புவிக்கப்படவிருக்கும் ஆங்கிலப் பட்டதாரிகளுக்குக் (Graduates) குறிக்கப்பட்டுள்ள தகுதிகள் மிகவும் குறைந்தன. ஆறாந்தொகுதியிற்றேரிய பட்டதாரிகளும் (VI Group B.A.) 1913ம் ஆண்டிற்கு முந்திய பட்டதாரிகளும் நாட்டுமொழியில் மேம்பட்ட தேர்ச்சியை வேறுவழிகளில் எய்தியவரெனச் சான்றுகள் இருந்தாலன்றி இவ்வேலையை அவர்களிடம் ஒப்புவிக்கலாகாது.

(ஊ) நாட்டுமொழிகளிலொன்றைத் தமது தாய்மொழியாக்கொண்ட ஆங்கிலப்பட்டதாரி எவரும் கல்லூரிகளிலுள்ள பண்டிதர் பதவியில் அமர்த்

த்தப்பெறலாமென்று கூறியிருப்பது எள்ளி நகையாடற்குரியதாயிருப்ப துடன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக்குழுவினர் இக்காரியத்தில் எத்துணை அறியாமையும், பொறுப்பற்ற தன்மையும் உடையவரென் வெளிப்படுத்து வது மாகின்றது.

(எ) நாட்டுமொழிப் பயிற்சியின் கண்காணிப்பாளர் நியமனத்தின் தேவை ஏதுக்கள்கொண்டு நாட்டப்படவில்லை. அப்பணியாளரின் தகுதி களாவது கடமைகளாவது விவரிக்கப்படவுமில்லை; இந்நியமனம் தேவை யானதே அன்று.

(ஏ) நாட்டுமொழிகளில் மேலான புலமையுள்ள பண்டிதர்களின் உயர்ந்த ஊதியம் ரூபா ஒரு நூறே என்பதாக வரையறுத்துவிட்டு, நாட்டு மொழி இலக்கிய இலக்கணங்களில் மிகவும் குறைந்த பயிற்சியுடையவர்களும் நாட்டுமொழிபற்றிய வேலையில் ஐந்திலொன்று அல்லது ஆறிலொரு பங்கு மட்டுமே செய்ய வேண்டியவர்களும், மொழிபெயர்ப்பு வேலையொன்று மட்டுமே பார்க்கத்தகுதி யுள்ளவரெனக் கருதப்படுபவர்களுமான ஆங்கி லப் பட்டதாரிகளின் ஊதியம் ரூபா நூற்றைம்பதிலிருந்து ரூபா இரு நூற்றைம்பதும் அதன் மேலுமாகலாமெனக் குறிப்பிட்டிருப்பது முறை யற்றதும் அநீதியுமான ஏற்பாடாகும். சொற்பெருக்காளர் (Lecturer) உதவிச் சொற்பெருக்காளர் முதலியோருக்கு வழங்கப்பெறும் ஊதியத் தினையே பண்டிதர்களும் பெறத்தகுதி யுடையவர்கள்.

முன் மொழிந்தோர்

திரு. A. சிதம்பரம்பிள்ளையவர்கள், B. A.

வழிமொழிந்தோர்

திரு. T. A. பாலகிருஷ்ணபிள்ளையவர்கள், B. A.

எல்லோராலும் ஒருமித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குமரகுருபர அடிகளும் அவர் நூல்களும்.

திரு. இ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
வடமொழிக் கல்லூரி, திருவையாறு.

முற்றொடர்ச்சி துணர் 3. பக்கம். 88

நிற்க, மாசிலாமணிக் குரவன்மீ தியற்றப்பட்ட மும்மணிக் கோவை வரலாறுங் காணேம். இவ்வாலாறுதானுங் குறிப்பிடப் படாத புராணந்தான் என்ன புராணமோ!

"நீதி நன்னெறி விளக்கமுந் தவளநன் னிறக்கலை மகண்மாலை
யாதி யாஞ்சில பனுவலும் பகர்ந்தனன் அதன்றிருகை முந்நான்
ஞேதி னோர்பலர் வகைதெரிந் தோர்சில ருரைப்பர்" [கென் எனப்பின் கூறுகின்றனரேயெனின், பாயிரத்துட் பகர்வதையே இவர் பகர்வதால் வருநலனுமொன்று மின்றே. "மாசிலாமணிக் குரவன், பதமலர் பழிச்சு மற்புதகுண குமர, குருபரன் எனும் பெயர் மருவிய முனிவன்" எனும் பாயிரவடிகளான் அவ்வாலாறு கொள்ளக்கிடக்கும்.

புனைந்துரையணிகள் மல்கிய செய்யுள் பல பாடின இவருக்கிதுபாடின் வருமிழுக் கென்னையோ! ஒன்று மின்றே! அதுகிடக்க, தருமபுரத்துற்று, அறிவின் குரவன் அருளுரை கேட்டபின்னர், காசி நகர் போதரவிழையுந் தருவாயில் ஆலவாயிலுறை யம்மையாம் அங்கயற்கண் எம்பெருமாட்டியார் குமரகுருபரமுனிவரரைத் தன்மீது நூல் ஒன்று நூற்க வேண்டு மென வேண்டினரெனவுங் கூறுகின்றனர். அங்ஙனம், சேல் விழியம்மையார் விழைந்தன ரென்பது மிகவு நன்றே. எல்லாம் வல்ல இறைவன் அலைந்துந்திரிந்தும் அடியுண்டும் மிதிபட்டும் தம்மீது பாடல் கேட்க வேட்கையில் இப்பெருந்திருவாட்டியார்

வேட்டனரெனக் கூறலொருவா றெப்பெனினும், துறவிக்கு வேந்தன் துரும்பாயிருப்ப, இம்முனிவர், திருமலைநாயகன் பெரு வாயிலுற்று அவன் றுணைநாடி அஃதெய்தா துளஞ் சலிப்பெய்தி உலைவுற்றனரென்ப தென்ன அணியோ! அருளுற்றுத் தெரு ளுற்ற அடிகள் மன்னவனைத் துன்னுவரோ? துன்னார்.

1. "மின்னுணு நுண்மருங்குல் மீனாட்சி விழைந்ததனால்".

2. "கார்கொண்ட வென்றெடுத்துக் கவின்பிள்ளைக் கவிபாடிச்
சீர்கொண்ட மதுரைநகர்த் திருமலைநா யகனெனுமன்
னேர்கொண்ட வரண்மனைவா யிலிற்சென்று னங்குற்றார்
கூர்கொண்ட மதியிலராய்க் கொடுஞ்சொற்கள் கூறினரே.

3. அவ்வள்வி லவன்றுணைக்கொண் டாங்கேற்று மாசையொழித்
திவ்வளவுஞ் செய்யாதா ளென்செய்வா ளெனுஞ்சினங்கொண்
டொவ்வருமவ் வூர்க்கோட்டை யுத்தரவா யிலிற்றுயின்றான்
தெவ்வடர்வேல் வழுதிதரு திருமகண்மெய் யருள்கூர்ந்து

வேறு.

4. அந்த மன்னவன் கனவினின் முதற்குலத் தரிவைதன்
[னுருவாய்ப்போய்
வந்த மாதவன் சென்றதுந் துயில்வதும் வார்சடை யொடு
[சேர்த்துச்
செந்தமிழ்க்கவி வடிவமாந் தனைக்கொடு செலநினைத் ததுஞ்
[சொல்லி
யிந்த மாநக ருயும்படி யழைத்தாங் கேற்றுவித் திடுகென்று

5. சிறிது றுத்துரைத் தக்கண மம்முனி சிந்தையின் கனவூடும்
பொறிசி லாவுமார் பினனனுன் வருந்திறம் புகன்றனள்
[விழித்திட்டார்
செறியு மன்பொடு மன்னனுந் தவன்றனைத் தெண்டனிட்
[டழைத்தேகி
யறிஞர் கண்டுகண் டின்புறத் தக்கவா டம்பரம் பலகாட்டி

6. சடையிற் கட்டுண்டு கிடப்பதாங் தன்னொரு சககளத் திரி [தன்மை
யடையு மம்பிகை வடிவமாம் பிரபந்த மதனையத் தனைநீக்கி
மிடைத ரும்பல புலவரும் தவத்தரும் வேதியர் களுஞ்சூழப்
படைகொண் மன்னனு மின்புறச் சந்நிதி யினிற்படித் தனன் [மன்னே"
எனுமிவை புலவர்புராணச் செய்யுட்களாம்.

இச்செய்யுட்கள் எத்துணை முரணினை மெய்த்துணையெனக் கோடற் கிடனாகின்றன. பின்னர், வடநாட்டில், சில செயல் முடிப்பான்கருதித் துருக்க மன்னன்மாட் டெய்திய செய்தியை யுளத்திலிருத்திப் பாடியிருப்பர்போலும். ஆண்டும் அடிகள் புறக் கணிக்கப்பட்டாரிலர். வாயில் காவலாளராற் றள்ளுண்டார் என் பது என்ன விந்தை! அந்தோ! சடைமுடி கல்லாடை தரித்த பெரியார் நிலை அக்காலத்தும் (அவமதிக்கப்பட்டிருக்குமா!) வணங்கும்பகுதியி லிணங்கா தொழிந்ததோ! இம்முருகதாசரும் சில குறுநிலமன்னரா லப்பகுதியி லகப்பட்டிருத்தல்வேண்டு மென்வும் எண்ண இடனாகின்றது. இதுநினைந்தே யடிகட்கு மிவ்வண்ணம் பாக்கள் பாடினரன்றிப் பிறநெறியாற்பாடியிரார்.

இக்காலத்திற் சிலர் நூல்களை நூற்று அவைகளைப் பரப்புவான் பிறர்துணை நாடியும், அரியவுரையேடுகள் பிறர் கையகப்படாமல், தம்கையகப்படின் அவைகள், தம்மாற் குறிக்கப்பட்டனவாகவே தம் பெயர் குறித்து வெளியீடு செயற்குப் பிறர்துணைநாடியும், சாற்றுக்கவி பெற்றும் விளங்குகின்றனர். அவ்வாறுன்னினரோ அடிகள்.

எல்லாம் வல்ல எம்பெருமாட்டியார் சககளத்திரி யென்று கூறுவரோ? இம்முனிவார் சடைமுடி இறைவன் சடைமுடிக் கொப்பாயினும் கங்கை இங்கமர்ந்ததோ! யோகுநிலைக்க ணின்றவரன்றே இந்நிலை யெய்துவர். அன்றிச் சிவவடிவத் திருவுருவம் புனைந்தவர் இங்ஙனமுறுஞ்செய்தி யாண்டுங் குறிப்பித்தலொண்ணுதே! அணிகளின் நயமும் ஈண்டுரைக்கற் பாற்றன்றே! என்னே! இவர் தம் புராண முறை! தருமபுரத்

துறை முனிவர்கள் ஒன்றன் வழியாகத் துய்த்தலுந் துய்த்தற் பயிற்சியும் (அநுபவமும் அநுபோகமும்) ஆய இருநெறிகளான் அறிவினிலை யுணர்த்துவர் என்ற சில கொள்கைகளுமுண்டு. அந் நிலைபற்றிக் கூறியிருப்பாராயி னொருவாறிருப்பல் கூடும். சககளத் திரியினு லூறெய்துவது உலகினர்க்கன்றோ நிகழ்வது. எல்லாம் வல்ல பெருமாட்டிக் கிவ்வண நிகழ்ந்ததென் று கூறுவது இறைவி நிலைக்குப் பொருந்தாதே. அதன் மேலும், 'மந்தப் பக்குவர் பலருளர்' எனப் பிறரை மறுக்கின்றனர். அவர் கூறுவதிவர்க் குடன்பாடில்லை யெனில் இவர் முறைபிறழ்வோ டுரைத்திடல் உடன்பாடு ஆம்போலும்.

இதனுற் சில புனைந்துரையணிகள் புணர்க்கப்பட்டு, அணி பெறச் செய்புள் செய்தனரேனும் முறைபிறழ்வு இத்துணை வருதற்கியைபென்னை யெனலே எனது நோக்கம். இது வழி நூலா? சார்புநூலா? இவ்விரண்டனியலும் விரவி முற்றிய நூலா? தனிப்பட்டநூலா? ஒன்றினு மொன்றாததா யன்றோ காணப்படுகின்றது.

ஆலவாயண்ணல் திருவருள்பெற்ற நற்றவப் பெரியார், ஊமைதீர்ந்தபின்றைத் தன்னூர்ப்புக்குச் சின்னுள் அவண் தங்கி, அப்பதிவிட்டு, வடநாடு நோக்கிவருவார் ஆற்றிடைப்பட்ட கோயில்களைக் காணுதே சென்றனரோ! அங்ஙனமேகினும் கடம்பவனக் கண்ணுதலைக் காணுதே போயினரோ! அன்றி, அறிவினுசிரியன் நல்லருள் பெற அண்ணியபோழ்து அணைந்த தால், வல்லே நண்ணினரோ! எனின், ஒன்றுமின்று. தருமைப் பெரும்பதி சார்ந்து அக்குரவன்தந்த எச்சிலாகிய மிச்சிலுண வுண்டு அறிவு நிலைபெற்றுப், பின்னன்னவனுணைவழி யன்றோ பலவூர் காணப்புக்கார் எனச் சாற்றுகின்றனராகலின், அது கரு தியே இங்ஙனங் கூறினாரன்றி வேறின்று.

"முன்னும் பின்னுமெத் தனைதல மோவிதி முறைப்படி
தொழுதிட்டான்
தன்னு டைக்கவி விழைபவர்க் கேதுதி சாற்றுதன்
மையன்போலும்

மன்னு தில்லையிற் போய்ச்செய்புட் கோவைமென்
வண்டமிழ்த் தொடைசாத்திப்
பன்னு காசிகண் டான்பதத் தொருகலம் பகத்தொடை
புனைந்தானே" என்ற

இச்செய்யுள், அடிகளின் வரலாற்றிற்குப் பெரிதும் முரணினை விளைத்திலது; புள்ளிருக்குவேளூ ரமர்ந்த செவ்வேளா ராணையால் அடிகள் அவர்மீது பிள்ளைக்கவி பாடியுளாராகலின்.

ஆனால், திருவாரூர் நான்மணிமாலை, சிவகாமியிரட்டை மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, மதுரைக்கலம்பகம் முதலிய நூல்களைப் பாடுமாறு அவ்வவ்வூர் எழுந்தருளிய இறைவனும் இறைவியும் விழைந்ததாக வரலாறு குறிக்கப்பட்டிலது. "விழைபவர்க் கேதுதி சாற்றுதன் மையன்போலும்" எனத் தாசர் கூற விசையுமா?

"இந்துத் தானிநாட் டினிலருந் தமிழ்சிறு விடுதன்மிக் கரிதேயா
முந்து நல்லற நடப்பது மருமையோ வென்னமுன் னுபுமுன்னுண்
மைந்து றங்குரு குலத்தர் வாழ்ந் திருந்தமா நகரிலந் நாள்வைகி
வெந்து வீரசே கரனெனத் திகழ்தரு மிலேச்சமன் னனைக்
கண்டான்"

என்பது செய்யுள். தமிழ்மொழி அந்நாட்டினிற்பரவிடச் செய்நோக்கம் அடிகள் சிறிதுங் கொண்டிருக்கவே மாட்டார்கள். இதற்கு முன்னர் யாண்டுமவர்கள் தமிழ்மொழி பரவிடற்கு முயன்றதாகத் தெரிந்திலது. பல நூல்களை நூற்றலே, அதன் பொருட்டாமெனின், காசிக்கலம்பகமும் ஈண்டுத் தாமேபாடி முடித்துளார் எனினது முரணுறுமென்க.

அடிகள் சிவபெருமான் எழுந்தருளிய கோயில் பாழ்த்தது கண்டு உளம் பொறுமல் அதற்காவனபுரிய வூக்கங்கொண்டாரெனல்வேண்டும். அன்றிப் பிறநெறிகொடு முயன்றாரெனல் சாலுமோ சாலாதென்க. குருகுலத்துப் பெருநிலவரயர் வாழ்ந்த நகரம் துருக்க மன்னனுக்கு உகப்புடைநகரா யிருந்ததென்பது

மிகப்பாராட்டற்குரித்தாம். அதுவே இக்காலை (டெல்லி) நகரெனக் குறிப்பிடப்படுவதாம். அத்துருக்க மன்னன் ஆண்டதற்கு அறிகுறி பல வின்றுங் காணப்படுகின்றன.

காசிக்கருகாமையிலும் அம்மன்னவன் தனக்கொரு கோட்டை யமைப்பித்திருத்தல் வேண்டும். அவ்வூர்க் கோட்டையில்தான் அடிகள் போய்க்கண்டு அரனமர் கோயில் செப்பஞ்செய்தற்குரியனவற்றை வேண்டியிருத்தல் வேண்டும் எனத்தோன்றுகின்றது. மதுரையையாண்ட திருமலையைக் கச்சிநகர்த் திருமலைபூபதியென்பதுபோல அவனையும் டில்லி பாட்சா எனக்குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அவ்வரயனும் டில்லியைத்தலை நகரமாக் கொண்டிருந்தனன். அங்ஙனமாகக் காசிப்பதியிலுள்ள கேதாரர் கோயில் நாற்புறத்துங் காடுகளாலும் துருக்கர் மாளிகைகளாலுஞ் சூழுண்டு சிறப்பொடு பூசனை செல்லாதிருந்திருத்தல் வேண்டும். அதனைக் கண்டு பொறைசெயவொண்ணுவடிகள் செப்பஞ் செய்ய முன்வந்துள்ளார் அன்றிப் பிறவல்ல.

பின் தன் கோயில்புக்க அடிகளைக் கண்ட அரயன், சில வினுக்களை யெழுப்பிட அவற்றிற்கேற்றவாறு அவர் இறையிறுத்தனர் என்று கூறல் ஒருவாறிசையுமெனினும், அரயன், உசிதமிலா மொழிகளுரைப்ப அடிகளுமன்னவாறு அறைந்தனரெனின் மன்னரைச் சேர்ந்தொழுகுஞ் செந்நெறியினின்று திரிந்தவராவான்றோ? சேர்ந்தொழுகுமாறு நீதிநெறிவிளக்கத்துச் செம்மையுற வுரைத்துளாராகலின், அங்ஙன மொழுகியிரார் எனலே நன்றாம். அரயனைத் தன்னெண்ணப்படியாக்க முயலுகையில் இங்ஙனமுரையாடல் பொருந்தாத கூற்றாதும். அரயன், தம்மொடுண்டற் கிசையுமென வுரைத்ததையே வசிதமில்லுரையா வுரைத்தனர்.

“அவர்க ளுண்பன கேட்டறிந் தேனமட் டருந்திடா
[தேனென்றான்
தவல ரும்புகழ்க் குருசொல விலையெனச் சாற்றலு மவ்வாறே
சிவனெ னுங்குரு வெமக்குமா மிசந்தினச்செப்பிட விலையென்ன
வுவகை யோடுதெய் வீகமொன் றேனுநீண் டுளுற்றுதி
யெனச்சொன்னான்.

இன்றி ராவினின் றெய்வமே யெனைத் தெரித் திடுமெனப்
[புகன்றோர்பால்
வென்றி வேலனைக் கருதிநொந் திருந்தனன் வேறுபல் குருவாயு
நின்றிலக்கமி னெறிசெயு மவனவ னிதந்தொழுங் குருவாகிச்
சென்றிங் குற்றவன் விருப்பமீங் தனுப்புதி சிக்கிர மென்றனே"

அடிகள், அத்துருக்கமன்னவ னுண்ணப் பன்றியிறைச்சியை யருந்தாத தன்பொருட் டென்னை யெனவினவலும், அவன் விடை தருவதும், இவ்வடிகள் மீண்டுரைப்பதும் அது கேட்டு உவகை யுறுவது நிகழ்ந்திருக்கலாகாவென்றே யுன்னல் வேண்டும். என்னை? துருக்கவரசன் இங்ஙனம் வினவின் இயற்கையின் முற்றிய சினமுடையோனாகலின் சினவாதிரான். இவன், பொறைநிலையனாயினும் பக்கலில் அமைச்சர் முதலியோரின்றிப் பேசினனென்றலும் பொருந்தாது. அவனெடுரையாடுங்கால், அவனாட்டு மொழிவாணனொருவனைக் குறுக்கிட்டாதலுரைத்திடல் வேண்டும்.

இவண் பெரிதும் இடரும் ஐயப்பாடும் உண்டாகின்றன. இது போழ்தினுங் காணலாம். அவர் காலத்து அம்மன்னனு லாதரவொடுதந்த பெரும்பொருள்கொடு உண்டாக்கிய திருத்தளி யும் கேதாரர் திருக்கோயிலும், நன்குணர்த்தாநிற்கும் அடிக ளாற்றிய பொருட்செயல்களை. அடிகள் தம் பெயரால் நிறுவப் பெற்ற திருத்தளியின்கண், அரியேறூர்ந்து வந்து அம்மன்ன னிடம் அத்தாணிக்கண் புக்கநிலைதொட்டு உருவம் அமைக்கப்பட் டுள்ளது. நிகழாத நிகழ்ச்சிக் குறிகுறியாக வுருவமெடுத்தலொண் ணுது. நாடு அவன்நாடாகலானும், புறக்கொள்கையினை யுடைமை யினுனும், அந்நாட்டவர் அவ்வரசனைச் சார்ந்தவராகலானும், பொய்ம்மையாக வெடுப்பித்தல் ஒல்லாததாய் முடியுமன்றோ!.

இச்செயலின்றிக், கண்ணுதலடியவரென வொத்துக்கொண்ட டில்லியையாளு மிறைவன் "அடிகாள் நீவிரியாதேனுமோர் கடவுட் செயல்காட்டல் வேண்டு" மென்று கழறினன் என்றும்

அதற்கு மக்க தேசிகன் கனவிலுணர்த்தியதை யக்கடவுட் செய லாகக் கொண்டு பின்னடிகட்காவன வீட்டினுன் என்றுங் கூறல் எத்துணை வேற்றுமையைத் தருகின்றது.

யாவரும் மருளுறும்படி கடவுட் செயலீட்டினும் அதனை யொப்பலே முடியாதெனும் அவ்வரயன் கனக்கண்டுஉதவினு னென்றல் பொருந்துமா? முற்று மொற்றுமைப்படாதென்க. கலை மகளார்துதி அவ்வரயமொழி தனக்குக் கைவருமாறு பாடியிருத் தல் வேண்டும் என்க. இதுகாறுங் கலைமகளைக் கூறுமையானும் இக்காசிப்பதிவந்ததும் ஈது நிகழ்ந்திருத்தலானு மென்க. கடவுட் செயல் பொருட்டு 'வேன்றிவேலனைக் கருதிநோந்திருந்தனன்' என்றல் ஈண்டுப் பொருந்துமா றுய்தல் வேண்டும்.

'நடனஞ்செய் திருவடியி னன்னிலைமை யுணர்வித்துத்
திடமிஞ்சப் பரிகலத்தைச் சிவவேடத் தடனீந்தான்'

என்றவடிகளான் குருவின்றன் நல்லருட்பெருக்கினுற் பெற்றன நல்லறிவும் சிவவேடமும் என்பது புலனுகின்றது.

ஆசிரியனருளாற் றரப்பட்டது இந்நல்லறிவாயின் வேலனைக் கருதுமாறென்னை? தனக்கு மூங்கையைத்தாங்கிய முன்னவ னுகலின் முன்னினனென்றல் ஒருவா றியையுமேனும், தருமைப் பெரும்பதி மடத்திற்குக் கூடலுடையான் (சொக்கநாதன்) என் றும் அவ்வாதீனத்து முதற்பண்டாரசந்நிதி (நற்பொருள்) யாகிய ஞானசம்பந்தர் ஆலவாயணைந்துறுநா ளொருநாள் தன் அகங்கை புக்க சொக்கநாதராகிய சிவலிங்கப் பெருமானையே தன் மடத்து வைத்துப் பூசனை முதலிய ஆற்றினர் என்றும் அதனையே பின் வந்தவர்களும் ஆற்றிவருகின்றுர்கள் என்றும் கண்டுங் கேட்டு முளேம். ஆகலின், இத்தாசர், திருச்சிற்றம்பல முடையானைக் குறித்தலில்வாறு பொருந்தும். குமரகுருபரராகிய இவ்வடிகட்கு, நல்லறிவு கொளுத்தியவர் தருமைப் பெரும்பதியில் நான்காவது குருமூர்த்தியாக எழுந்தருளிய மாசிலாமணியார் ஆவர். இம்மாசிலாமணியார்மீதியற்றப்பட்ட மும்மணிக்கோவையுமஃது பகாநிற்கும்.

தொடரும்.

ஓம்.

தமிழ் மொழியும் தமிழ் நாடும்.

திரு. மு. வே. மா. வீ. உலகவூழியரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், சிதம்பரம்.

ஆளுடைய பிள்ளையார் அழகுதிரு வடிமலர்கள்
நாளுமெந்த முள்ளத்து நனிமலர்ந்து வளர்ந்திடுக.

தமிழ்மொழியும் தமிழ்நாடும் என்னும் இந்தக் கட்டுரையில் தமிழ் மொழியின் பண்டை நிலையையும், தமிழ் நாட்டின் பண்டை நிலையையும், இக்காலத்து அவைகளின் நிலையையும், அவைகட்குச் செய்யக்கடவ நமது கடமைகளையும் கூறுகின்றாம்.

மொழி.

மக்களின் உள்ளத்துத்தோன்றிய எண்ணத்தினைப் பிறருக்கு நன்கு விளக்கும்படி அன்னரால் உரைக்கப்படும் பொருளுடைய ஒருவகை ஓசையே மொழி எனப்படும். மொழியப்படுதலின் மொழியெனக் காரணக்குறிபெற்றது. இம்மொழியினை மக்கள் எவ்வாறு உணர்ந்தனர்? எவ்வாறு இசைக்கும் இயல்பு வாய்ந்தனர்? இஃது அவர்கட்கு இன்றியமையாததா? இது செயற்கையாக ஆக்கப்பட்டதா? இயற்கையாக உள்ளதா? என்பவற்றை முதற்கண்கூறி மேற் செல்லுதும்.

மக்கள் மிகமிக்க பழங்காலத்து மொழியினை உணராதவராகவே நெடுங்காலம் வதிந்து வந்தனர். காரணம் என்னையெனில்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்"
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி" என

ஆளுடைய அடிகள் கூறியாங்கு மக்கள் வளர்ச்சி நெறியைப் பெற்றகாலத்திற்கு முன்னர் மொழியாற் பேசும் உரம் பெற்றிலர்.

பேசும் உரம் பெற்றிலரேனும், மெய்ப்பாட்டினாலும், உறுப்புக் களால் குறித்துணர்த்தும் சமிக்கையாலும் தங்கருத்தைப் பிறருக்கு உணர்த்தி வந்தனர். இவ்வாறு உணர்த்தும் தன்மையை நாப்புலனும், செவிப்புலனும் பெறாத மூகையர்பால் நாம் காண் கின்றோம். மக்கள் யாக்கை பெறுவதற்கு முன்னர், உயிர்கள் எடுத்துப்படிபடியாக உயர்தற்குள்ள உடம்பொடு கூடிய விலங்கு பறவை முதலிய, பேசுதல் இலவாய் சமிக்கைகளுட் சிலவற்றை உடையவாய் இருத்தல் சான்றுபகரும். உலகத்துள்ள எல்லா மக்களும் இவ்வகையால் தங்கருத்தை அஞ்ஞான்று உணர்த்தி வந்தமையான் அன்றே இஞ்ஞான்றும் பன்னூறாக வேறுபட்ட மொழிகளை வழங்கிவரும் மக்கள் பேசும் திறமை பெற்றிருந்தும் ஒவ்வோர்கால் அப்பழமையை மறவாமல் தலையை அசைத்து உண்டு இல்லை என உணர்த்தியும், உள்ளங்கையில் விரல்களை மடக்கி முழங்கையைத் தோட்கு நேராகச் சிறிதெடுத்து வினாவி உணர்த்தியும், சுட்டுவிரல் ஒழிந்த நான்கு விரல்களையும் மடக்கி அதனை மாத்திரம் நீட்டிச் சுட்டி உணர்த்தியும் வருகின்றனர். இவையெல்லாம் சமிக்கையின்பாற் படுவன. பற்களிடை நாவை நீட்டிப் புருவத்தைக் கோட்டித் தம் வெகுளிக்குறிப்புணர்த்து கின்றனர். வாயிதழ்களைப் பின்னிழுத்துப் பற்களை வெளிக் காட்டி மகிழ்ச்சிக்குறிப் புணர்த்துகின்றனர். இவையெல்லாம் மெய்ப்பாட்டின்பாற் படுவன. பெருகுதலிற் சிலவே காட்டப் பட்டன. இத்தகைய சமிக்கை, மெய்ப்பாடுகள் இளஞ்சிறார்பால் மிகுதியும் பயின்றிருத்தல் காண்க.

மக்கள் அறிவைப் பெறப்பெற நாப்புடைபெயர்த்து ஒலியெழுப்பி மொழியைப்பெற்று நாகரிக முற்றனர். ஆகலின் மொழி என்பது செயற்கையின்பாற்பட்டது என்று கூறல் அமையும். எனினும் மிகப் பழைய காலத்துக்கும் இக்காலத்துக் கும் இடைப்பட்ட காலத்தை நினைக்குங்கால் மொழி இயற்கை என்று கூறலே பொருந்தும். அன்றியும் மெய்ந்நூலுடையார் இல்லதற்குத் தோற்றமின்மையின் இல்லாப்பொருள் தோன்று வதன்று எனவும், உள்ளபொருள் ஒடுங்கி நின்று தோன்றுவதனை இல்லாப்பொருள் தோன்றிற்று என்று கூறுதல் இழுக்கு எனவும்

விளக்கிக் கூறுகின்றனர். ஆதலின், மொழி மறைந்திருந்து பின் தோன்றிற்று என்று கோடலே பொருத்தமுடைத்தாதலின் இயற்கையாக உள்ளது என்று கூறலே பொருத்தமுடைத்தாதல் அறிக.

மக்கள் நெடுநாட்கள்வரை மொழியினை அறிந்து பேசும் ஆற்றல் இலராக இருந்தாரேனும், நாளாக நாளாகப்பின் அறிவுரம் பெறப்பெற விலங்குத் தன்மையமைந்த தம் உடலுறுப்புக்கள் திருத்தமுற்று மக்கட்டன்மையை எய்திய காலத்துப் பேசும் உரம் பெற்றனர். உயிர்கள் தாம் ஏறிய உடம்புகட்கேற்ப அறிவு விளக்கம் பெறும் என மெய்ந்நூல் கூறலின் மக்கள் தூய உடம்பு பெற்ற பின்னர்ப் பேசும்வன்மை பெற்றார். அவ்வாறாயின் மக்களுடல் வாய்க்கப்பெற்றஞான்றே அன்னார் பேசும்வன்மை பெறாததென்னை எனின், மக்களுடல் வாய்க்கப்பெற்றனரேனும் பல்கால் பிற உடல்களொடு பழகிய பயிற்சியால் விலங்கியலையே கொண்டிருந்தனராகலின் உடற்றிருத்தம் உற்று அவ்வியல்பு நீங்கப்பெற்ற பின்னரே மொழியறியும் ஆற்றல் வாய்ந்தனராதலின் அவ்வாறு கூறல் குற்றமாம் என்க. மக்களுள் விலங்கியல் வாய்ந்தார் சிலர் உளர் என்பது ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும், வள்ளுவனார்க்கும் ஒப்பமுடிந்ததாகும்.

சமிக்கை என்னும் விதையினின்றும் தோன்றிய மொழி, நாள் பல செல்லப் பல சீர்திருத்தங்கள் பெற்று மக்கட்கு நலம் பல புரிந்தது. அறிவொடு பிரியாத மொழியுணர்ந்தோரே மக்கள்; கூடி வாழுங்கொள்கையுடையர். அதனை உணரார் மக்கள் ஆகார்; கூடிவாழுங்கொள்கையர் ஆகார். எனவே மொழி என்பது மக்கட்கு உயிரை ஒத்த இன்றியமையாப் பொருள் என்று கூறுதல் இழுக்காகாது.

தமிழ்மொழி.

இவ்வாறு கூறப்பட்ட மொழி இட வேறுபாட்டானும், கால வேறுபாட்டானும் பலதிறப்படும். ஓரிடத்துப் பலகாலங்கள் பெயர்ந்து பெயர்ந்து வருதலானும், ஒருகாலத்து ஓரிடம் மற்றோ

ரிடமாக மாறப்படுதலானும் காலத்தை இடமும், இடத்தைக் காலமும் ஒவ்வோர்கால் வெல்கின்றன. இதனாலே மொழிகள் பலவாயின.

மலை கடல் காடு முதலிய இட வேறுபாட்டானே மொழிகள் வெவ்வேறாயின என்பதனை வலியுறுத்த "மொழிபெயர் பன்மலை இறப்பினும்" (ஐங்குறு—321) என்று அறிஞர் கூறியுள்ளமை யறிக. காலத்தான் வேறுபடுதல் முன்னர் வருவனவற்றால் அறிந்துகொள்க. அத்தகைய மொழிகளுள் தொன்று நிகழ்ந்த பலவற்றையும் அறியும் அறிவுடையார் அறிவிற்கப்பாற் பட்டனபோக, எஞ்சியுள்ள மொழிகள் பலவற்றுள் தொன்மைச் சிறப்புடைய தனிமொழிகள் என அறிஞராற் கொள்ளப்பட்டன கிரீசு (Greek), இலத்தீன் (Latin), ஈபுரு (Hebru). வடமொழி, தமிழ் முதலியவாம். இத்தகைய பழைய மொழிகளுள் தமிழ் மொழி ஒரு தனி மொழியாகும். இஃதறியும் மதுகை இலாத சில்லோர் வடமொழியினின்றும் தமிழ்மொழி தோன்றிற்று என்று சில நூற்றாண்டாகக் கூறினர்; கூறுகின்றனர்; (இனிக் கூறுர்.) மிக்க அறிவுடைய சில பெரியாரும் இக்கூற்றை ஒப்புக்கொண்டு வடமொழியில் உள்ள திராவிடம் என்னும் சொல் தமிழ் எனத் திரிந்தது என்று தாம் எழுதிய சுவடிகளில் பொறித்துச் சென்றனர். அந்தோ! யாம் அவர்கள்மீது குறை கூறுகில்லேம். ஏனெனில், அவர்கள் அக்காலத்து ஆராய்ச்சிக் குரியகருவிகள் மலிந்திராமையானும், காலப்போக்கானும், பிறர்களின் ஏமாற்றுதலானும் அவ்வாறு மயங்கிவிட்டனர். ஒரு மொழிக்கும் மற்றோர் மொழிக்கும் இயைபு கண்டறிதற்கு மொழிநூற்புலவர் சில வழிகள் கண்டுள்ளனர். அவை, தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள், எண்ணுப்பெயர், முறைப்பெயர், சுட்டுப்பெயர், கூலப் (Corn) பெயர், வீட்டிற் பழகு பொருட்பெயர் முதலிய சொற்கள் அம்மொழிகளுள் ஒத்திருத்தலும், மொழிநடைப் போக்கு ஒத்திருத்தலும் ஆம்.

வட முனைக்கும் (North Pole) தென் முனைக்கும் (South Pole) இடைப்பட்ட சேய்மையளவு, வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இக்கூறுபாட்டுள் வேற்றுமை இருத்தலின் இவை

இரண்டும் தம்முள் இயைபுடையன என்று கூறுதல் யாண்டைய தென்க. தன்னொடு சிறிதும் இயைபில்லாத வடமொழியினின் றும் தமிழ்மொழி தோன்றிற்று என்று கூறுவார் கூற்று முயலின் முதுகினின்றும் கொம்பு முளைத்தது என்பாரின் கூற்றொடு ஒத்த லின் எள்ளி நகையாடற்பாற்று என்க. இங்குக் கூறியவேயன்றி, "புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக் குறிப்பு, வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோன்ன பிறவும் தமிழ் மொழிக்கே சிறப்பாக இருத்தலின், அன்னார்கூற்று வாய்ச்சொல்லாகாது.

தமிழ் என்னும் சொல் எவ்வாறு உண்டாயிற்று என்பதற் குப் பலர் பலகாரணங்கள் கூறுப. அவற்றுள் சில காட்டுதும். தம் மொழி என்பது தமிழ் என்றாயிற்று என்று ஒரு சாரார் கூறுப. மெய்யெழுத்துக்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட் டுள்ளன வாதலின் அம்மூன்றுவகை எழுத்தாலும் ஆகிய சொல் லால் குறிக்கப்படும் மொழியாதலின் காரணப்பெயர் ஆயிற்று என்று ஒரு சாரார் கூறுப. தனி மொழி என்று பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு மொழியின் பெயர்க்காரணம் பல ஆயிர மாண்டுகள் கடந்த பின்னர் கண்டுபிடித்தல் என்பது மிகவும் அரிய தொன்றாகும். ஆதலின் தமிழ் என்னும் சொல் இக்கார ணத்தை உடையது என்று கூறும் ஆற்றல் இல்லேம். என்னே! இவ்வாறு கூறுதல் தோல்வியிடமாகாதோ எனின், ஆசிரியர் தொல்காப்பியனார் சொற்கள் பொருள்களைக் குறித்ததற்குக் கார ணம் உளதேனும் சிலவற்றிற்குக் காரணம் விளங்கத் தெரிதல் அரிதென்பது பட "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு" (உரி-96) என்று சூத்திரஞ் செய்தலின் குற்றமில தாதல் அறிக. எனினும் தமிழ் என்னுஞ் சொற்கு அறிவுடைப் பெரியார் அழகு, அன்பு, இனிமை முதலிய பொருள்கள் கொண் டுள்ளார். ஆதலின் அஃது அழகும், அன்பும், இனிமையும்

தன்னகத்துடையது என்பது போதரும். உலகத்துள்ள ஒவ்வொரு மொழிப் பெயர்க்கும் பொருள்கூறி அவ்வம் மொழிக்கும் இப் பொருட்களை ஏற்பித்தல் எலாதோவெனின், யாம் தமிழ் மொழியின்பாற் கொண்டுள்ள பற்றின்மிகுதியாற் கூறினமல்லம். ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு சிறப்புண்டு. எடுத்துக் காட்டாகச் சிலகூறுதும். வடமொழி ஆங்கிலம் முதலியன, நுண்பொருள்களை நன்கு விளக்குதற்குரிய மொழிகளால் அமைந்துள்ளன. பிரஞ்சு (French) பெண்கள் பேசுதற்கினிமையாக அமைந்துள்ளது. கவர்படுபொருளில்லாத மொழியாகவும் அமைந்துள்ளது. அதனாலேயே மேனாட்டார் உடம்படிக்கை அம்மொழியிற் செய்துகொள்கின்றனர். மலையாளம் நகைச்சுவை துளும்பும் உரையாட்டிற்கினிமையாக அமைந்துள்ளது. தெலுங்கு மொழி இசைபாடுதற்கினிமையாக அமைந்துள்ளது. இவற்றை ஒப்பவே தமிழ்மொழி கீழ்க்காட்டிய பண்புகளை மற்றமொழிகளை விடச் சிறப்பாகத் தன்னகத்துடையதாக அமைந்துள்ளது. இவ்வியல்பு நோக்கியே 'கல்வியிற் பெரியர்' என இயல் நூல் உரையாசிரியரால் எடுத்துச் சிறப்பிக்கப்பட்ட கம்பநாடர் "குழுவு நுண்தொளை வேயினும் குறிநரம் பெறிவுற்று—எழுவு தண் தமிழ் யாழினும் இனியசொற் கிளியே" என்று கூறுவாராயினர்.

தமிழின் பண்டை நிலை.

இத்தகைய தமிழ் மொழி பண்டைக் காலத்து மிக்க சிறப்புடைத்தாய் மற்றைய மொழிகளிலும் விஞ்சியிருந்தது. இக்காலத்துச் சிலர் பண்டைக்காலத்துச் சிறப்பை எண்ணுதல் அறிவுடைமையாகாது என்று வாது புரிகின்றனர். அன்னார் கூற்றுப் பிழைபாடுடையதாகும். நமது பண்டைச்சிறப்பை அறிந்தோமானால், அந்தோ! நாம் பெருந்துயிலில் உறங்குகின்றோமே! துயில் நீங்கி எழுதல் வேண்டாமா? ஏனையரைப்போல் நங்கடமையையும், பணியையும் செய்தல் வேண்டாமா? என்பவற்றிற்கேதுவாகிய நினைவும், அது பற்றித்தோன்றும் ஊக்கமும் உரனும் வருமாதலின், பண்டைச் சிறப்பைப்பற்றி எண்ணவேண்டியது இன்றியமையாததாகும்.

ஆரிய மொழி நடு ஆசியா (Central Asia)வில் இருந்து இந்திய நாட்டிற்கு வருதற்கு முன்னர் இந்திய நாடு முழுவதிலும் உள்ள மக்கள் பேசிவந்த மொழி தமிழே. இதற்குச் சான்றாக இமையமலைப் பக்கத்துள்ள பல நாடுகளில் தமிழ் மொழியோடு ஒற்றுமையுடையமொழியை அந்நாட்டு மக்கள் பேசிவருகின்றனர் என்று அறிஞர் கூறுகின்றனர். வடநாட்டுள்ள பல நகரங்களும், ஊர்களும் இன்றும் ஊர் என்னும் பெயர் இறுதியில் இட்டு வழங்கப்பெறுதலும் இதனை வலியுறுத்தும். ஆரியரும் தமிழரும் தம்மிற் கலந்த காலத்துக்குச் சிறிது பின்னர் தமிழர் தென்னாட்டிலேயே பெரிதும் உறைந்து வந்தனர். ஆதலின் விந்தமலைக்கு (Vindhya Mountains) வடபகுதியில் அவ்வாரியமொழியின் கலப்பால் வங்காளம் முதலிய பல மொழிகள் தோன்றலாயின. விந்தமலைக்குத் தெற்குப் பகுதியில் தமிழ்மொழி நிலவிவந்தது. இயற்கையாக மலையிடையிட்ட நிலங்கள் பல இருத்தலாலும், பெரிய யாறுகள் சில ஓடிவருதலாலும், மக்கள் தம்முள் கலந்து பயிலுதற்குரிய கருவிகள் அக்காலத்து வாய்க்கப்பெறாமை யாலும் வடுகு (Telugu), கன்னடம், துளுவம் முதலியமொழிகள் தமிழிலிருந்து தோன்றலாயின. இம்முறைமை யறிந்திருந்தும் சிலர் அவை வடமொழியிலிருந்து தோன்றின என்று கூறு கின்றனர். ஐயகோ! ஐயகோ! அன்னார் நடுநிலையில்லார் என்று கூறுதலாற்போந்த குற்றம் என்னை? இவை தமிழ் மொழியில் நின்றே தோன்றின என்னும் உண்மையை மேற்கூறிப்போந்த ஒரு மொழிக்கும் மற்றொரு மொழிக்கும் ஒற்றுமை அறிதற்குக் கூறிய வழியானும் அறிந்துகொள்க. எனவே, முன்னர்க் கொடுந் தமிழாக இருந்த தெலுங்கு முதலிய மொழிகள், பின்னர் வெவ்வேறு மொழிகளாகப் பிரிந்துவிட்டன என்று கூறல் அமை வுடைத்து. இவ்வாறு தெலுங்கு மொழி பிரிந்த காலம் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பேயாம், ஆசிரியர் தொல் காப்பியர்காலம் வடமொழியில் உள்ள வேத காலங்கட்கு முந்திய தாகும். இவ்வாறு கூறுதல் ஆசிரியர் நச்சினார்க்கினியருக்கும் கருத்தாதல் தொல்காப்பியப் பாயிரத்து அன்னார் உரையிற் காண்க. தொல்காப்பியர் காலத்து மேற்கும் கிழக்கும் கடல்கள் எல்லையாகவும்

வடக்கும் தெற்கும் வேங்கடமென்னும் ஓங்குயர் வரையும் குமரியாறும்* எல்லையாகவும் பொருந்திய பெரு நிலப்பரப்பில் தமிழ் மொழி நிலவிவந்தது. இதனை "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்னும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்துத் தொல்காப்பியர் காலத்திருந்த பனம்பாரனர் கூறியவாற்ருன் அறிக. இவ்வாறு எல்லை கூறின் மலையாளமொழி (Malayalam Language) அக்காலத்தில்லையோ வெனின்? மலையாளம் சேரநாடு எனப் பெயர் வழங்கப்பட்டமையானும், சேரநாட்டு அரசர் தமிழரசர் மூவருள் ஒருவராகலானும், சேர அரசர் பலர் நல்லிசைச் சங்கப்புலவர் வரிசையில் சேர்ந்திருந்தனர் ஆதலானும், ஆசிரியர் தொல்காப்பியர் சேர அரசர்களின் அடையாளப் பூவாகிய பனம்பூவைச் சிறப்பித்துக் கூறியிருத்தலானும் மலையாளம் என்னும் பெயருடைய மொழி ஒன்று அக்காலத்து இல்லை என்க. கடைச்சங்க காலத்தும் மலையாள மொழி இல்லை எனக்கூறல் அமையும்; என்னை? பதிற்றுப்பத்து முதலிய நூல்கள் சான்று பகர்தலால். மலையாளம் அக்காலத்துக் கொடுந் தமிழ் நாடென வழங்கப்பட்டமையான் செந்தமிழ் நாட்டு வழக்கில் சிறிது திரிந்து வழங்கப்பட்டதென்று கோடலே அமைவுடைத்தாம். நன்னூலாசிரியர் காலத்துக்கு முன்பு மலையாளம் தனி மொழியாகப் பிரிந்துவிட்டது. அதனுற்ருன் அவ்வாசிரியர் காலத்திருந்த வேற்ருேர் புலவர் நன்னூற் சிறப்புப்பாயிரத்து, "குணகடல் குமரிகுடகம் வேங்கடம்" என்று கூறினர். எனினும் தெலுங்குமொழி தமிழ் மொழியொடு மிக்க வேறுபாடுற்றிருத்தல் போல மலையாள மொழி தமிழ் மொழியோடு மிகுதியான வேறுபாடுடையதன்று. வேற்றுமை முதலிய உருபுகளும் தன்மை முன்னிலை வினைவிகுதிகளும், வினையெச்சவாய்பாடுகளும்கூட இன்னும் வேறுபாடுற்றில. மலையாள மொழி யறியார் மலையாள மொழியென்பார்; அதனை அறிந்தார் அதனை நறுந்தமிழ்மொழி என்பர்.

---

* குமரி என்ன ஒரு மலையும் இருந்தது.

“ பகலெல்லாம் பணிப்பெட்டுப் பணிசெய் தந்தியாகும் போள்
பகலீசன் படிஞ்ஞாறெக் கடலில்போய்க் குளிக்குன்னு ”,

“ விலே யேறுள்ள வைரக்கல் ஒருபாடு விதச்சென்ன
நில தோன்னிக்கு மாகாசம் பலநட்சத்ர சாலத்தால்,”

“ இரவில் நா முறங்ஙும் போள் ஒருகேடும் வராய்வானுய்
அருகில்காத்து நில்க்குன்னு பரமேஞன் கனிவோடும்,”

“ கருணையேறு மத்தைவம் த்ருவடியுடெ த்ருக்கால்
கருதிகொண்டு வேணம் நா முறங் ஙானுமுண்மானும்.”

இச்செய்யுட்கள் தமிழ்மொழியாலானவைபோலக் காணப்படுதலை நன்கு நோக்குக. தமிழ் மொழியில் இஞ்ஞான்று விரவிப்பயிலும் அத்துணை வடமொழிச் சொற்கள் இங்குக் காட்டிய பாக்களுள் இடம் பெருமையறிக. செய்யுட்கள் குறட்டாழிசையின்பாற் படுதல் அறிக. இதுகாறும் கூறப்பட்டன தமிழ்மொழி யின்னது என்பதும் அது பயின்ற நிலமும் ஆம். இனித் தமிழ் மொழியின் பண்டைச் சிறப்பினை ஆராய்வாம்.

தமிழ் மொழியின் பண்டைச் சிறப்பு.

ஒரு மொழி நன்னிலையில் பாராட்டப்பட்டதென்றால் அம் மொழியில் பல நல்ல நூல்கள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அம்மொழியினை நன்கு கற்றபுலவர் பலர் இருந்திருத்தல்வேண்டும். அம்மொழியாராயும் கழகம் இருந்திருத்தல் வேண்டும். அம் மொழியினைக்கற்று வல்ல புலமுடையரை மக்கள் நன்குமதித் தொழுகியிருத்தல் வேண்டும். தமிழ் மொழியில் பழங்காலத்து அருந்தமிழ் நூற்கள் பல இருந்தன என்பது களவியல் உரை யானும், சிலப்பதிகாரப் பாயிரத்து அடியார்க்கு நல்லார் உரை யானும் நன்கு அறியலாம். அன்னார் எடுத்துக்காட்டிய நூற் பெயர்க்களவில்லை. பலதிறப்பட்ட கலைத்துறை நூற்கள் யாண் டொழிந்தனவோ! யாண்டொளித்தனவோ! இயற்கை வெப்பம் மிக்க இந்நாட்டில் எட்டுச்சுவடிகட்கு ஊறு விளைக்கும் சிதன் முதலியவற்றின் மலிவானும், முற்காலத்து அடிக்கடி நிகழ்ந்த கடற்கோளானும் இறந்தொழிந்தன பல. பிற்காலத்துப்

பிறநாட்டார் படை எடுப்பினாலும், போற்றுவார் இன்மையானும் இறந்தொழிந்தன பல. இக்காரணங்களைப் பொய்க் காரணங்கள் என்று கூறும் புதியர் சிலர் உளர். அன்னார் பழைய ஏட்டுச் சுவடிகளைப் படித்துப்பார்த்தல் வேண்டும். அல்லது, திருவாளர் மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்பால் கேட்டுணர்வார்களாக. பிற்காலத்திற் கூறிய இரண்டு உரையாசிரியர் கூற்றுக்களைக்கொண்டு பழங்காலத்து நன்னூல்கள் பல தமிழில் இருந்தன என்று கூறுதல் பொருந்துமா என்று சிலர் கேட்கலாம். புறநானூற்றுள் "மண்டிணிந்த நிலனும்" என்பதனை முதலாக உடைய பாட்டு ஒன்று உள்ளது. இச் செய்யுள் பாரதப்போர் நிகழ்ந்த காலத்துச் செய்யப்பட்டதென்பதனைத் தமிழறிந்தார் அறிவர். இதன்கண் சேர அரசன் ஒருவன் பாண்டவர் படைக்கும் கௌரவர் படைக்கும் வரையாது சோறு கொடுத்துவந்தான் என்பதனை இச்செய்யுட்கண்ணுள்ள

> "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. சிலர் பிற்காலத்திருந்த சேர அரசன் ஒருவன்மேல் தன் முன்னோரின் பெருமையை ஏற்றிக் கூறியதாகாதோ எனக் கூறுகின்றனர். அப்பாட்டின் அடியில் சேரமான்பெருஞ்சோற்றுஉதியன்சேரலாதன் என எழுதப்பட்டிருத்தலின் அன்னார்கூற்றுப் பிழைபாடுடையதென்க. அன்றியும் இச்செய்யுள் பழங்காலத்துப் பாடப்பட்டதென்பதற்கே தொகை நூலாகிய அந்நூலுள் தொகுத்தோரால் பிற்காலத்துப் பாக்கட்கெல்லாம் முன்னர் வைக்கப்பட்டது. இன்னும் பழம் பாட்டுக்கள் பலவற்றுள் இவன் சோறளித்ததனைப் பிற நிகழ்ச்சிகட்கு உவமையாகக் கூறியிருத்தலும் தமிழறிவார் அறிவர். இச் செய்யுட் போக்கினையும், இயலமைதியையும் ஆராயின் இச்செய்யுள் செய்வதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மொழி இசை, இயல் அமைதியுடன் மிளிர்ந்ததென்பது நன்கு விளங்குகின்றதன்றோ. இதன்கண், போர் நிகழ்ச்சிக்குத் தும்பை

எனப் பெயர் கொடுத்தலின், தமிழில் பொருளிலக்கணம் பாரத காலத்திற்குமுன்னரே இருந்ததென்பது தெரிகின்றது. இதன்கண் நால் வேதம் என ஒரு தொடர் வந்துள்ளது. இச்செய்யுட் காலத்திற்குப் பிற்காலத்தே வியாசர் வடமொழியில் இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் வகுத்தமையின், இந் நால்வேதம் என்னும் தொடர் அக்காலத்துத் தமிழிலிருந்த நான்மறைகளைக் குறிக்கின்றது என்று ஆசிரியர் மறைமலையடிகள் நுண்ணிதின் ஆராய்ந்து கூறியுள்ளார்.

இனி, தமிழுக்குச் சிறந்த இயல் நூலாக ஒப்புக் கொள்ளப் பட்டது தொல்காப்பியம். இஃது தொல்காப்பியன் என்னும் பெயருடையாரால் செய்யப்பட்டமையின் தொல்காப்பியம் எனப் பட்டது. சிலர் 'திரணதூமாக்நி' என்று கூறினர்; கூறுகின்ற னர். தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலும், பிறநூல்களுள் தொல்காப்பியரைப்பற்றிக் கூறிய குறிப்புக்களிலும் 'தொல்காப்பி யன்' என்னும் பெயர் கூறப்பட்டிருக்கின்றதேயன்றி இப்பெயர் கூறப்படாமையின் இப்பெயர் கொள்ளற்பாற்றன்று. தமிழுக்குச் சிறப்புடைய இயல்நூல் செய்தஒருவர் 'தூரும்பு, புகை, நெருப்பு' என்னும் பொருளுடைய பெயர்வைத்துக்கொண்டனர் என்பதற்கு ஏது அறியாமையினும் அறியாமையுடைமை யன்றி வேறென்? இலக்கியத்தில் திரட்டப்படுவது இலக்கணம் என்பது இந் நூலாசிரியர் கருத்து. அக்கொள்கையை அறிவுடையார் இன்றும் ஒப்புகின்றனர். எனவே இவர்காலத்துக்கு முன்னரே பல சிறந்த இலக்கிய நூல்கள் இருந்தன என்பது வெளிப்படை. தொல் காப்பியத்திற்கு முன்னர் அகத்தியம் எனப் பெயருடைய நூல் ஒன்று இருந்தது என்று புறப்பொருள் வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரம் முதலிய வற்றால் தெரிகின்றது. இதனை வலியுறுத்தப் பழைய இலக்கிய இலக்கணங்களில் சான்று இல்லாமையின் அஃதொரு நூல் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். அஃதெவ் வாறாயினுமாக. எனினும், தொல்காப்பியச் சூத்திரங்கள் சில வற்றுள் "என்மனார் புலவர்" "வரையார் புலவர்" "மொழிப" என்பன முதலான தொடர்களும், சொற்களும் கூறப்பட்டிருத் தலின் தொல்காப்பியத்திற்கு முன்பும் சில இயல் நூல்கள் இருந்

தன என்பது வெளிப்படுதலின், தொல்காப்பியர்காலத்துக்கு முன்னரேயே தமிழ் மொழி இலக்கண இலக்கியச் செறிவுடைய மொழி என்பதனை அறிவுடையார் மறுரர்.

இனி, இத்தகைய நூல்கள் பல இருந்தமையின் இந்நூல்களைச் செய்த புலவர் பெருமக்கள் பலர் இருந்தனர் என்பதனை எல்லோரும் ஒப்புக்கொள்ளுதல் இன்றியமையாததே.

இனி, புலவர் பலரும் குழீஇத் தமிழாராய்ந்தனர் என்பதற்குத் தென்தமிழ்நாட்டின் தலைநகராகிய மதுரையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழ்ச் சங்கம் மூன்று தோன்றித் தமிழைப் பேணி வந்தன என்று கல்லாடம், களவியல் உரை தெரிவிக்கின்றன. சைவவைணவப் பெரியாரும் தமது பாக்களில் விளக்கியுள்ளார்.

சிலர், பிற்காலத்தார் கூறுவனவற்றை யாம் ஒப்பேம். சங்கம் இருந்ததே இல்லை என்று கூறுகின்றனர். அந்தோ! முறையின்றிச் சில நூற்களைச் சிறிது கற்றவுடன் செருக்குமிக்குப் பலவும் அறிந்தார் போல் தஞ்சொல் இழுக்கிற் படுமாறறியாது கூற முற்படுகின்றனர். பல காலத்துப் பல மக்கள் பாடியவற்றைப் பொருள், அடிவரையறை, பாவியல் முதலிய ஏதுக்களாகத் 'தொகை நூல்' எனவும் தனித்தனிப்புலவரால் நெடும்பாட்டுக்களால் யாக்கப்பட்டமை ஏதுவாகப் 'பாட்டு' நூல் எனவும், ஒழுக்கங் கூறுதல், பாவொத்திருத்தல் முதலிய ஏதுக்கள் பற்றிக் கீழ்க்கணக்கு நூல் எனவும் சங்க நூல்களை வகுத்துள்ளார். சங்கம் இலதேல் பல நாட்டிலுள்ள பல புலவர்களின் பாக்களைத் தொகுத்தற்குரிய கருவிகள் அக்காலத் தின்மையான், அப்பாக்களை இயைபுபற்றிச் சேர்த்தற்கு இயலாதாகையானும் சங்கம் இருந்ததென்பதே பொருத்தமுடைத்தாதல் அறிக.

(தொடரும்)

உ

உணவு.

திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், உயர்தரக் கல்லூரி, நாங்குனேரி.

நாம் ஏன் உண்ணவேண்டும்? இவ் வினவைக்கேட்ட சிறு பிள்ளைகள்கூட "நமக்குப் பசி உண்டாகிறது, அதனால் பசி தீர உண்ணுகிறோம்" என மறுமொழி கூறுவர். மக்களில் அன்று பிறந்த குழந்தைகள் தொட்டு இறக்கும் வேலையிலுள்ள கிழவர் வரை அனைவரும் பசிக்கும்போதெல்லாம் உண்ணுகின்றனர். அதைப்போலவே காடுகளில் அலைந்து திரியும் யானை, புலி, மான் கடுவாய் முதலிய மாக்களும், நம்மால் நம் வீடுகளில் வளர்க்கப் பெறும் பசு, எருமை, ஆடு, நாய் முதலிய மாக்களும் அவ்வப் போது தத்தமக்கேற்ற உணவைச் சாப்பிடுகின்றன. அதைப் போலவே பாம்பு, புழு முதலிய ஊர்வனவும், கழுகு, காக்கை, குருவி முதலிய பறப்பனவும் ஆகிய உயிர்களும் உண்ணுவதை நாம் காண்கின்றோம். நமது இல்லங்களில் அருமையாக நம்மால் வளர்க்கப்பெறும் பன்னிறக் கிளிகளும், மயில்களும், புறாக்களும், நாகணவாய்ப் பறவைகளும் நமது மாதர்களால் அருகிருந்து அன்புடன் உணவூட்டப் பெறுவதை நமது கண்ணாரா நாளும் காண்கின்றோம். நீர்வாழ்வனவாகிய மீனும், முதலையும், திமிங்கிலமும், ஏனைய பூச்சிகளும் உணவருந்தியே உயிர் வாழ்கின்றன. நமது தலையில் வாழும் பேன்களும், நமது வீடுகளின் சுவர்களிலும் கட்டில்களிலும் வாழும் முகட்டுப் பூச்சிகளும் நம்முடைய செந்நீர் அருந்தியே உயிர் வாழ்கின்றன. இம்மட்டோ? மரம், செடி, கொடி, புல், பூண்டுகளும்கூட உண்ணாது உயிர் வாழ்வதில்லை.

நாம் ஒருபோது உண்ணுதிருப்ப மேல் நமது அறிவு மயங்குகின்றது. உணவு விரும்பும் உணர்ச்சியே பசி. பசியை இன்னது என்று சொல்லத் தெரியாத சிறுபிள்ளைகள் தங்கள் வயிற்றில் ஏதோ என்னவோ செய்கிறது என்று சொல்லுகிருர்கள். அருந்திய உணவு அற்றபோது வயிற்றில் அவ்வாறு உண்டாகும் உணர்ச்சியே பசியெனப்படும். பசித்தபோது உண்ணுதிருந்தால் "ஏற்பநிகழ்ச்சியன்ருே? பிறரிடம் நாம் உணவேற்பதால் நமக்கு இழிவு வருமே" என்ற மன உணர்ச்சி அற்றுப்போம். உணவையாரிடம் கண்டாலும் மானம்கெட்டு வாங்கித்தின்னும் அவா உண்டாகும். பசி மிகுதியு முடையார் தமது குலநலத்தை இழந்தவராவர். குலமுடைமையாவது தமது உயிர் நீக்கும் துன்பம்வரினும் தகாதசெயல்களைச் செய்யாமையே. ஒழுக்கமுடைமையும், வாய்மையுடைமையும், நாணமுடைமையுமே குலமுடைமையாம். பசி மிகுந்தபோது குளித்தல் முதலிய புற ஒழுக்கங்களும், தீங்கு நினையாமை பிறன்பொருள் வெஃகாமை முதலிய அக ஒழுக்கங்களும் அகன்றுபோம். பிறர்க்குத் தீமை தாாத சொற்களைப் பேசுதலாகிய வாய்மையும்போம். பழிநாணும் தன்மையும் போய்விடும்.

முன் ஒரு காலத்தில் கோசிகன் என்ற ஆரிய முனிவன் பசி மிகுதியால் புலைச்சேரி சென்று அங்கே கொடியில் தொங்கிக் கொண்டிருந்த நாய் வாலைத்திருடி உண்டு ஞாலத்தாரால் இகழப் பட்டான். அதனுல் அவன் ஒழுக்கமிழ்ந்தவனுய்ப், பிறன் பொருள் வெஃகித்திருடி வாய்மையற்றவனுய், உலகத்தார் தன்னை பழிப்பார்களே என்று நாணுமல் குலமிழந்தவனுனுன். அம் முனிவனுக்குத் தகாத செயல்களைச் செய்யக்கூடாது என்று கற்ற கல்வியும், கற்றபடி நிற்றலே கற்றதனுலாய பயன் என்ற அறிவுடைமையும் இல்லாதொழிந்தன.

இத்தகைய நிலையினனுகிய முனிவனுடைய உள்ளத்திலே இல்லாதாருக்குக் கொடுக்கவேண்டுமென்ற வண்மை யெண்ணமும், அந்த எண்ணத்தின் பின் தோன்றும் செயலாகிய கொடையும், உளவாமோ? ஆகாவன்ருே. அம்முனிவன் பசி மிகுதியால் நாய்

வாலைத் திருடிச்சென்றபோது பிறனொருவன் தனக்குள்ள பசி நோயைத் தீர்க்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருந்தால் அவன் அவ்வகையில் ஏதேனும் முயன்றிருப்பானா? அவன் செய்த நாய் வாற் களவை யாராவது கண்டு தடுத்தால் அவன் அவ்வாறு தடுத்தாருக்கு உறுகண் ஒன்றும் செய்யாதிருந் திருப்பானா? அவன் தன்னைத் தடுத்தார் யாவரேயாயினும் அவரை அவ்வமயம் கொலை செய்யவும் பின் வாங்கியிரானன்றோ? அச்சமயம் ஒரு உயிரை மற்றொருவன் கொலைசெய்து கொண்டிருப்பதை அவன் கண்ணாரக்கண்டாலும் அக்கொலையைத் தடுக்க யாதொரு முயற்சியும் செய்திரான். ஆதலின், பிற உயிர்களுக்கு உற்ற நோயை நீக்கலும் பிற உயிர்களுக்குத் தன்னால் யாதொரு ஊறுபாடும் செய்யாதிருத்தலுமாகிய தவம் அவனிடம் எவ்வாறு உளதாகும்? அப்போது அவனிடம் இரப்போர்க்கு ஒன்று ஈதலாகிய இசைபட வாழ்தல் அமையாதபோது அதன் பயனும் உயர்ச்சி அவன் மாட்டு எங்ஙனம் தோன்றும்? மேலும் அத்தகைய முனிவனுக்கு நன்மைதரும் ஒரு செயலைத் தொடங்கும் முயற்சியும் அச்செயலை எத்தகை இடையூறுவந்தாலும் அஞ்சாது கடைபோக முயன்று முடிக்கும் தன்மையாகிய தாளாண்மையும் உளவாவது எங்ஙனம்? கை கால் தளர்ந்து எதைத் தின்போமென அலைந்த அம்முனிக்கு அப்போது மாதர் மேலும் மனம் சென்றிருக்குமோ? ஆதலினாலன்றோ ஆன்றோரும்

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்."

எனவரும் அருமைக்கவியை அருளினார்.

ஆனால், மயிர் நீப்பின் வாழாத கவரிமாவைப் போல மானம் வரின் உயிர் நீக்கும் பெருந்தகையாளரும் ஒரு சிலர் உளராவர். அடுக்கிய கோடி பெறினும் ஒழுக்கங்குன்றுவ செய்யாத குடிப் பிறந்தாரும் ஒரு சிலர் உளராவர். சலம்பற்றிச் சால்பில செய்யாமல் மாசற்ற குலம் பற்றி வாழ்வாரும் ஒரு சிலர் உளராவர்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று" என்பது பொய்யா மொழியாம். நிற்க, ஒரு வேளை உண்ணாமையால் உண்டாகும் பசியினால் விளையும் கேடுகளே இவையாக, பல வேளை உண்ணாமையால் எத்தகைய இன்னல்கள் விளைவனவாமோ? பல நாள் உண வருந்தாமலிருக்கும் ஒருவனுக்கு நாளடைவில் உடல் மெலியும், கண் பஞ்சடையும், செவிகள் கேளா. இவ்வாறு எலும்பும் தோலுமாகி அவன் விரைவில் ஒரு செயலுமற்ற உடலினனாவான். அதனால் அவன் உயிர் அவ்வுடலைவிட்டு ஓடிவிடும்.

பட்டினி கிடத்தல் பல நோய்களுக்கு மருந்து என மருத்துவர் கூறுகின்றனர். ஆனால் பட்டினி கிடத்தற்கும் ஓர் எல்லையுண்டு. உண வொழிந்திருந்த ஒருவர் இரண்டொரு வேளைக் கப்புறம் உணவுண்ணத் தொடங்குவரேல், உண்ண வேண்டு மென்ற பேராவலிருந்தாலும் அவருக்குத் தாம் விரும்புமளவு உண்ண முடியாது. அதனால் அவர், உணவு தம் முன் இருந்தாலும் சில நாட்களுக்கு அதனைப் போதிய அளவு உண்ண முடியாமல் திண்டாடுவார் என்பது திண்ணம்.

பசியோடிருக்கும் ஒருவனுக்கு ஒரு வேலையும் ஓடாது. அவன் மாணவனாயிருப்பானேல் பாடங்களைப்படித்து மனதிற் பதியவைத்தல் அவனுக்கு இயலாது. பசிவேளையில் எந்த வேலையையும் செவ்வையாகச் செய்யமுடியாது. முன்னொருக்கால் நிகழ்ந்ததாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. ஒருக்கால் கைகள், கால்கள், செவிகள், வாய், நாக்கு முதலிய உறுப்புக்களெல்லாம் ஒன்று கூடி வயிற்றோடு சண்டை தொடங்கின. அவைகள் வயிற்றைநோக்கி, "பாவி வயிறே! நீ சுகமாக ஒரே இடத்தில் உட்கார்ந்து தின்று கொழுக்க, நாங்களெல்லோரும் உனக்கு உணவு தேடித் தருவதிலேயே எங்கள் காலத்தையெல்லாம் போக்குகின்றோமே. பார், உன்னை இன்றுமுதல் பட்டினிபோட்டு நாங்களும் உன்னைப் போலவே ஒரு வேலையும் செய்யாமல் நலமே இருக்கின்றோம்" என்று கூறி அதுமுதல் ஒரு வேலையும் செய்யாமல் வாளாவிருந்தன. சிறிது காலத்தில் அவை தங்களுடைய

குற்றத்தை உணரத்தொடங்கின. எவ்வாறெனில், கண்கள் பார்க்கும் ஆற்றலை இழக்கத் தொடங்கின. கை கால்கள் அசையவும் இயலாவாயின. செவிகள் கேட்கும் உணர்ச்சியை இழக்கலாயின. இவ்வாறே ஏனைய உறுப்புக்களும் தத்தம் அறிவை இழந்தன. அதனால் அவை தாம் படாப்பாடு பட்டு வயிற்றுக்கு உணவைத் தந்தால் அவ் வயிறு தமக்கு வலிமையைக் கொடுக்கிறது, இல்லையேல் தாமெல்லோரும் ஒருங்கு அழியவேண்டியதுதான் என்னும் உண்மையறிந்து அதுமுதல் தமது கடமைகளைச் செய்து வயிற்றுக்கு உணவுதந்து தாமும் வலியடைந்தன.

இவ்வுலகத்தில் எல்லா உயிர்களும் செய்யும் செயல்களெல்லாம் இவ்வொருசாண் அளவினதாகிய வயிற்றிலுண்டாகும் பசி நோய்க்குச் செய்யும் மருந்தேயாகும். உணவின் பொருட்டேயாகும். உயிர்கள் செய்யும் செயல்களெல்லாம் அவை மாண்டபின் எண்ணிப்பார்த்தால் "உண்பதும் உறங்குவதுமாக" முடியும்.

"சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்–போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்"

என்றார் ஆன்றோரும். சேவிப்போரும், இரவலரும், புரவலரும், பாவலரும், அனைவரும் வயிற்றின் கொடுமையைத் தணிப்பதற்காகவே முயன்று வருகின்றனர்.

பசிமிகும்போது சினமும் உடனே தோன்றி மிகும். பசித்திருப்போர் பக்கத்தில் அவர்களுடைய குழந்தைகள் வந்தாலும், மனைவியர் வந்தாலும் அவர்களுக்கு வயிறு நிரம்பு மட்டும் எரிச்சலுண்டாகிறது. அதனால் அவர்கள் தங்களருகில் வருவோரையெல்லாம் கடிந்து பேசத் தொடங்குகின்றனர். மேலும் எவ்வளவு இனிமையான பண்ணிசைகளைக் கேட்டாலும், உள்ளத்தை உருக்கும் கவிகளைக் கற்கத்தொடங்கினாலும் அவர்கள் உள்ளம் அவ்வேளையில் அவைகளின்மேற் செல்லாது உணவையே விரும்புவதாகும். தெய்வப்புலவர் திருவள்ளுவனார்

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்" என்றருளியிருக்கின்றார். இப்பொய்யா மொழியும் அப்பசிவேளையில் அவர்களிடைப் பயன்படாது போகின்றது. ஆனால் உண்டு மகிழ்ந்திருக்கும் பொழுது இன்னிசை முதலிய செவிக்குணவு கிடைத்து அது நெடுநேரம் தொடர்ந்து நிகழ்வதாயின் அப்போது பசி வேளை வந்தாலும் பசி தோற்றாது. அவ்வேளைகளிலேதான் திருவள்ளுவர் அருளிய இவ்வாக்குத் தெய்வவாக்காகிறது.

இனி, பசிநோய்க்கு ஏற்ற மருந்தாகும் உணவால் உடம்புக்கு விளையும் பயன்கள் இவையென ஆராய்வோம் உணவு உடம்புக்கு அதன் வளர்ச்சிக்குரிய பொருள்களைத் தருகிறது. குழந்தை பிறந்தவுடன் மிகச் சிறிய உருவுடன் காணப்படுகிறது. காலம் செல்லச்செல்ல அக்குழந்தை உருவத்தில் பெரிதாக வளர்கிறது. அது தான் பிறக்கும்போது இருந்ததைக்காட்டிலும் பன்மடங்கு பெரிய உருவத்தை அடைகிறது. தோற்றத்துக்கு அது பெரிய உருவை அடைவதோடுகூட எடையிலும் பன் மடங்கு வளர்கிறது. எழுபது பலம் எடையுள்ளதாக இருந்த குழந்தை வளர்ந்து பெரிய உருவையடைந்தபோது ஓர் ஆயிரம் பலங்களுக்கு அதிகமான எடையுள்ளதாக ஆகிறது. இவ்வாறு ஓராயிரம் பலத்திற்கு மேலான எடையடைந்த ஓர் ஆண்மகன் சில நாள் நோய்வாய்ப்பட்டு அதனால் உணவு கொள்ளாதிருப்பானானல் அவனுடைய உருவம் பருமனில் குறைவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அதனால் அவனுடைய நிறையும் மிகக் குறைந்து அறுநூறு அல்லது எழுநூறு பலங்கள் எடையுள்ளவனாக அவன் ஆய்விடுகிறான். அவனே நோய் நீங்கி உணவருந்திய பின் பழைய நிலையை அடைகின்றான். இதனால் உடலிலுள்ள பல வேறுவகையான உறுப்புக்களும் வளர்வதற்கு ஏற்ற பொருள்கள் உணவில் அமைந்து கிடக்கின்றன என்பது தெளிவாகிறது.

உணவு உடம்பின் நிலைபேற்றுக்குக் காரணமான சூட்டைத் தருகிறது. எந்த உடலில் கைவைத்துப் பார்த்தாலும் அதில்

சூடிருப்பதை நாம் அறிந்துகொள்கிறோம். இம்மண்ணுலகில் வெப்பம் மிகுந்த நாடுகளிலாயினும் அல்லது குளிர்மிகுந்த நாடுகளிலாயினும் எங்கும் உயிருள்ள உடல்களிலெல்லாம் வெப்பமிருப்பதை நாம் காண்கின்றோம். சூட்டளவு கருவி ஆங்கிலத்தில் "தெர்மாமீட்டர்" என்று வழங்கப்பெறுகிறது. "தெர்மாஸ்" என்பது வெப்பம்; மீட்டர் என்பது அளவு கருவி. தெர்மாமீட்டர் என்ற பெயர் லத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் வந்து வழங்குவதாயிற்று. இதன் அளவு ஆகிய எண்கள் "டிகிரி" எனப் பெயர் பெறும். இச்சூட்டளவு கருவியால் அளந்து பார்த்தால் மக்களுடைய நோயற்ற உடம்பில் தொண்ணூற்றெட்டு 'டிகிரி' அளவுள்ள வெப்பம் இருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம். அது எவ்வளவு குளிர் மிகுந்த மாரிக்காலத்திலாயினும் அன்றி வெப்பம் மிகுந்த கோடைக்காலத்திலாயினும் சரி எப்போதும் ஒன்று போலவே இருக்கிறது. மேலும் இச்சூடு நமது இந்தியா முதலிய வெப்ப நாடுகளில் வாழும் மக்களுக்கும், இங்கிலாந்து சுவிட்சர்லாந்து முதலிய குளிர் நாடுகளில் வாழும் மக்களுக்கும் எக்காலத்திலும் ஒன்றுபோலவே அமைந்திருக்கிறது. மிகுந்தாலும் குறைந்தாலும் உடம்பில் நோயுள்ளதென்பது புலனாகும்.

உடம்பு ஒரு புகைவண்டிப் பொறி (Steam engine)யைப் போன்றிருக்கிறது. புகைவண்டிப் பொறி வேலை செய்கிறது; உடம்பும் வேலை செய்கிறது. அப்பொறி சூடாயிருக்கிறது; உடம்பும் சூடாயிருக்கிறது. பொறிக்குச் சூடுண்டுபண்ணுவது விறகு; உடலுக்குச் சூடுண்டுபண்ணுவது உணவு. பொறியில் விறகில்லையானால் சூடு போய்விடுகிறது; அதைப் போலவே உடலில் உணவில்லையானால் சூடு போய்விடுகிறது. ஆனால் பொறியில் ஒளி தெரிகிறது; உடம்பில் ஒளி தெரிவதில்லை. ஏனென்றால், பொறியில் விறகு ஒரே இடத்தில் குவிந்து எரிகிறது; உடலிலோ உணவு பல இடங்களிலும் செந்நீராகப் பரவி அங்கங்கே ஒவ்வொரு அணுவோடும் சேர்ந்து எரிகிறது. மேலும், பொறியில் எரிதல் விரைந்து நிகழ்கிறது; உடம்பில் எரிதல் மெல்ல நிகழ்

கின்றது. விரைந்து நிகழும் எரிதலே ஒளியை விளைக்கின்றது; மெல்ல நிகழும் எரிதல் ஒளியை விளைவிப்பதில்லை. மற்றும் உணவு எரிதலால் உண்டாகும் சூட்டில் முக்காற்பங்கு வலிமை யாக உடலிற் சார்கிறது; அச்சூட்டில் ஒரு சிறு பங்குதான் உடம்பின்மேல் காணப்பெறுகிறது. பொறிக்கும் உடலுக்கும் உள்ள முதன்மையான வேறுபாடு என்னையெனில், பொறியி லுள்ள உறுப்புக்களெல்லாம் நிலை குலையும்போது உடையவனால் வேறு வேருகப்பிரித்துச் செம்மையாக்கப் பெற்றுப் பழையபடி ஒன்று சேர்க்கப் பெறுகின்றன; ஆனால் உடம்பிலுள்ள உறுப் புக்கள் நிலைகுலையும் போது, அம்மாறுபாடு உணவின் உதவியால் நமது முயற்சியில்லாமலே செம்மையுறுகின்றது.

உணவு செந்நீராகிப் பல அணுக்களிலும் பாவும்போது அவைகளுக்கு வலிமையைக் கொடுக்கிறது. பொறியின் உறுப் புக்கள் தொடர்ந்து நிகழும் வேலையால் தேய்ந்து போகின்றன. அதைப் போலவே உடம்பின் உறுப்புக்களும் தொடர்ந்து நிகழும் வேலையால் தேய்வடைகின்றன. இவ்விதமாக ஏற்படுகின்ற குறைவை நிரப்புவதும் உணவேயாம். இதனால், உணவு உட லுக்கு வளர்ச்சியைத் தருவதோடு தளர்ச்சியையும் நிரப்பி, சூட் டைக் கொடுப்பதோடு வலிமையையும் தந்து உதவுகின்றது என் பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

தமிழ்ப் புதுவாண்டு.

திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி.

தமிழ் மக்களுக்குப் புதுவாண்டு பிறப்பது சித்திரைத் திங்களிற்றானே என்பதை ஆயுமாறு இது வரையப்பட்டுளது. குளிர் நாட்டின்கணுள்ளார் குளிர் பொறுக்க முடியாமற் தீயினைப் பெருக்குவர். மப்புமந்தாரமில்லாத நாளுறின் அதனைக் கொண்டாடுவர். சித்திரைத் திங்கள் அத்தகையதே. ஆதலின் எரி பெருக்கும் மக்களுக்கு அது புத்தாண்டின் துவக்கமாதலியல்பு. அஃதன்றிச் செஞ்ஞாயிறு சிறந்த தமிழகத்திலுள்ளார் சூடுதணியுந் திங்களையே எதிர்பார்ப்பர். ஆடிக் காற்றெடுத்து ஆ அணி போன்ற கார்முகங்கள் வானிற்றிரண்டு பரவ ஞாயிறு வெப்பந் தணியும். மஞ்சுகண்டாடு மஞ்ஞை போன்று தட்பம் பொருந்தும் பருவத்தைப் பாராட்டுதல் தமிழகத்தாருக்கியல்பாகும். தமிழகங்களில் ஆவணித் திங்களில் ஞாயிறுதோறும் பொங்க விடுதல் வழக்கம். அது இஞ்ஞான்றும் நடைபெறுகின்றது. உயிர்ப்பொருள்கட்கு இன்றியமையாதன வெப்பமுந்தட்பமுமே. இவையிரண்டும் மிகினுங் குறையினும் நோய் செய்யும். இவை இரண்டுஞ் சீருறின் நோய்களணுகா. இவையிரண்டுஞ் சீருறுந் திங்கள் ஆவணியேயாம். அதுபற்றியே தமிழ்மக்கள் புத்தாண்டுத் துவக்கத்தை அத்திங்களில் வைத்தனர். கொல்லமாண்டென்று வழங்கும் தமிழக வாண்டு ஆவணித் திங்களிலேயே பிறக்கின்றது. அப்பொழுதுதான் தமிழ்மக்கள் புதுக்கணக்குத் தொடங்குகின்றனர். வாணிபத்தின் பொருட்டும் போரின் பொருட்டும் புறஞ்செல்கின்ற தமிழ்மக்கள் புத்தாண்டுப் பிறப்பை யொட்டியே தொழிலை நிறுத்தி அகநோக்கிவந்து அங்கண் படிகின்றனர். மாரிநீங்கும் வரை இல்லிலுறைந்து இல்லறம் நடாத்துகின்றனர். கலைகள் பயிலுகின்றனர். நாமகளை வழுத்துகின்ற

னர். தம் வழித்தோன்றல்களுக்குக் கல்வியைத் தொடங்குகின்றனர். தத்தந்தொழில்களுக்குரிய கருவிகளைத் திருவினின்றகற்றித் துலக்குகின்றனர். தமிழாண்டுப் பருவங்களாறும் ஆவணித்திங்கள்தொட்டே கணக்கிடப்படுகின்றன. அன்புடன் கலந்த அகத்தின்பம் பெறுவதும் ஆவணி தொடங்கியேதான். கூதிர், பனி, வேனிற் பருவங்களில் அவரவர்கட்கு ஏற்பட்ட தொழில் முயற்சிகளி லீடுபட்டு அரசுபுரங்காத்தும் அரும்பொருளீட்டியும் அன்பகமடைகின்றனர், அன்பரை மருவுகின்றனர். அந்நற்காலமே அறம்பயிலுந் தமிழருக்குப் புத்தாண்டு பிறக்கும் புனிதகாலமாகும். இதனைத் தமிழ்க்கலைவல்லார் தமிழ்நூற்றுணைகொண்டு விளக்குவாராக. தமிழ்மறை யறியாத வைதிக சைவர் வேதாகமங்களை மேற்கோளாகக் கொண்டு தாம் வைதிகரென்ற பெரும் பெயரணிந்து பொலிதல் போன்று, தமிழகத்தார் மற்றையர் பாராட்டுஞ் சித்திரைத் திங்களைக் கைக்கொண்டு தங்களுக்குரிய ஆவணித் திங்களை மறந்து தமிழ்ப் புதுவாண்டு பிறப்பது சித்திரைத் திங்களிலேயே யென்று கையேற்றனர் போலும்.

உ

சில தனிச்செய்யுட்கள்.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
அரசியலார் கல்லூரி, கும்பகோணம்.

இலத்திவாடிச் சமீன்தாரர்
மிகு திருவாளர், R. சின்னசாமி ரெட்டியார் அவர்கள்
திருமுன் கூறியவை.

விருந்துண்டு கூறியது.

கட்டளைக் கலித்துறை.

(1) வாழும் படியுல கேழும் புரந்து மருவலர்கள்
தாழும் படியர சாளுந் துரைசின்ன சாமிமன்னன்
சூழும் படிதரும் நல்விருந் துண்டு சுவைப்பதற்குப்
பாழும் பிரமன் வயிறின் றுமொன் று படைத்திலனே.

அவரது பேராண்மைக் குணத்தைப் பாராட்டிக் கூறியது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

(2) புனக்குறத்தி கணவனடி பணிசின்ன சாமியெங்கள்
[பூபன் றன்னோர்
மனைக்கிழத்தி யலாற்பிறரைத் தாயரென மதிப்பன்: இது
[மதனோ தோரான்
தனக்கொருத்த ரிதுசொல்லத் தாமில்லை: என்ன
[செய்வேன் சகியே! இந் நாள்
எனக் கொருத்திக் கேனுமன மிரங்கியணைந் திடநீது
[தேகி வாவே.

ஆசிரியரைக் கூறியது.

(3) முன்னமே யொருகுறத்தி "வரும் பொருளுண்"
[டென்றுகுறி மொழிந்த துண்டால் ;
பின்னுமே யிடமாடும் ; புள்ளிசையும் நல்வரவே பேசல்
[கேளாய்
இன்னுமே வரதநஞ்சயக்கவிஞர் பாட்டியம்பில்
[இணங்கிக் கொள்வார்
அன்னமே யுறவாடி யிலத்திவாடிக்கரசை யழைத்து
[வாடி.

குலதெய்வங் கூறியது.

(4) நாமாந்தும் பாலென்னத் தேனென்னத் தமிழ்க்
[கவிகள் நயந்து கேட்டுத்
தாமார்ந்த சுவையுடையா ரிலத்திநகர்த் துரைசின்ன
[சாமி மன்னர்
ஓமாந்தூர் போய்வருங்காற் கேட்டதெலாந்
[தரவிசைவர் உபாயந் தோழீ!
ஏமாந்து போகாதே வரும்வழிபார்த் தவர்தமையிங்
[கிட்டு வாவே.

(ஊர் கூறவே அதன் முதன்மைத் தெய்வமுங் கூறியதாயிற்று.)

கோடை பாராட்டியது.

(5) உடுக்கையிலே யுதறியுடை யுடுக்கையிலே யுனைநினைவள் ;
[ஒண்பூ மாலை
தொடுக்கையிலே யுனைநினைவள் ; உயர்சின்ன
[சாமியெங்கள் துரைவந் தென்றன்
படுக்கையிலே யணைந்துசுகந் தரக்கண்டேன்
[கனவென்பள் ; பாவலோர்க்குக்
கொடுக்கையிலே முகமலர்ந்தின் மொழிபுகன்று
[குறிப்பறிந்து கொடுக்குங் கோவே.

—✤—